செ.வெ.எண்: 53 /அக்டோபர் / 2021 நாள்: 08.10.2021

**2021-2022-ஆம் நிதியாண்டிற்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24-இல் "மாநில அரசின் விருது-பாராட்டு பத்திரமும், ரூ.1,00,000/-க்கான காசோலையும் வழங்கப்பட உள்ளது. பெண்களின் சமூக முன்னேற்றத்திற்காக பாடுப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகள் விண்ணப்பிக்கலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

-----

2021-2022-ஆம் நிதியாண்டிற்கு தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24-இல் "மாநில அரசின் விருது-பாராட்டு பத்திரமும், ரூ.1,00,000/-க்கான காசோலையும் வழங்கப்பட உள்ளதாகவும், பெண்களின் சமூக முன்னேற்றத்திற்காக பாடுப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகள் விண்ணப்பிக்கலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தகுதிகள்:**

5 வயதிற்கு மேல் 18 வயதிற்கு உள்பட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை (31 டிசம்பரின்படி) கீழ்காணும் வீரதீர செயல் புரிந்து இருக்க வேண்டும்.

பிற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல், பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல் மற்றும் தவிர்த்தல், வேறு ஏதாவது வகையில் சிறப்பான/தனித்துவமான சாதனை செய்திருத்தல், பெண்களுக்கு எதிரான சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காண்பதற்கு ஒவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருத்தல், ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல் போன்ற செயல்களில் சிறந்து விளங்கும் பெண் குழந்தைக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருதுக்கு சாதனை புரிந்த குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற கடைசி நாள்:25.10.2021 ஆகும். கடைசி நாளிற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து அனைத்து தகுதிகள் பெற்ற விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு தேசிய பெண் குழந்தை தினத்தன்று மாநில அரசின் விருது வழங்கப்படும். இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி, தொலைபேசி எண்: 0431-2413796 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**